# <u>என்னோடு நீ பேச வந்தாய்</u>

லல லல லலல / ம்..ம்...ம்...ம்

என்னோடு நீ பேச வந்தாய்
என் வாழ்வை நீ மாற்றி நின்றாய் } 2
என் தெய்வமே என் தெய்வமே
நீயின்றி நானில்லையே
உன் நினைவின்றி வாழ்வில்லையே

இதய தாகம் நீ இருளில் தீபம் நீ / ம்..ம்...ம்...ம்
உதயக் காலம் நீ உறவின் பாலம் நீ
தள்ளாடி நான் தடுமாறினேன்
கண்மூடி நான் வழிமாறினேன்
தீராத துன்பங்களில் நீ / தாயாகி தாலாட்டினாய்

என்னோடு நீ பேச வந்தாய்
என் வாழ்வை நீ மாற்றி நின்றாய்

உயிரின் தீபம் நீ உலகின் வேதம் நீ / ம்..ம்...ம்...ம்
மழையின் மேகம் நீ மலரின் மணமும் நீ
என் பாதையில் முன்போக வா
கண் போலவே எனைக் காக்க வா
ஆதாரம் நீயாகவே உன் / அன்பொன்றே எனதாகவே